1981 மே 12]

மல்லிக்கருகில் பழுதடைந்துள்ள பாலம்.

*வினா எண் 1069. திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சாத்தூருக்கும் திருவில்லிப்புத்தூருக்கும் இடையே பெருவழித்துறைக்குப் பாத்தியப்பட்ட சாலையில் மல்லிக்கு அருகில் பழுதடைந்து உள்ள பாலம் 1974-75-ஆம் ஆண்டு டெண்டர் விட்டும் வேலை இன்னும் நடைபெறாமல் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், மேற்படி வேலையை காலதாமதம் செய்த ஒப்பந்தக்காரர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது?

(இ) எவ்வளவு ரூபாய் மதிப்பீட்டிற்கு காண்ட்ராக்ட் விடப்பட்டது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, (அ) வேலை முடிந்து போக்குவரத்துக்கு அந்தப் பாலம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) காலதாமதத்திற்காக ஒப்பந்தக்காரருக்கு தாக்கீதுகள் கொடுக்கப்பட்டதுடன் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

(இ) ரூ. 19,441.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, இது முக்கியமாக சாத்தூருக்கும் திருவில்லிப்புத்தூருக்கும் இடையே பெருவழித்துறைக்கு பாத்தியப்பட்ட மல்லிக்கு அருகில் உள்ள பாலமாகும். இந்த முக்கியமான சாலையில் உள்ள இந்தப் பாலம் கட்டுவதற்கு 7-8 ஆண்டுகள் ஆகியிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட முக்கியமான பாலமாக இருக்கின்ற இடங்களில் டெண்டர் விடாமல் அரசே அவற்றை கட்டுவதற்கு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, இது 1974—இல் அங்கீகாரம் அளிக்கப்பட்டதாகும். அந்தப் பணி நின்றுவிட்ட காரணத்தால், வேலைகள் துவங்கப்பட காலதாமதம் ஆகிவிட்டது. தற்போது அந்த வேலைகள் முடிக்கப்பட்டு, போக்குவரத்தும் செல்வதால், அதற்காக நன்றி சொல்லும் கடமைப்பாட்டு உணர்வோடு மாண்புமிகு உறுப்பினர்கள் இருப்பார்கள் என்று நம்புகிறேன். இதுபோன்ற பாலங்கள் நல்ல முறையில் கட்டுவதற்கான திட்டங்களைத்தான் அரசு மேற்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுரையிலுள்ள பல்கலை நகரை நகரியமாக்குதல்

*வினா எண் 1070 திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

மதுரை பல்கலைக் கழகம் அமைந்துள்ள 'பல்கலை நகர்' நகரியமாக (டவுன்ஷிப்) அறிவிக்கப்படுமா?

[1981 மே 12

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இது பற்றிய செயற்குறிப்பு ஏதும் இப்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. பு. நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மதுரைப் பல்கலைக்கழக ஆசிரியர்கள், அலுவலர்கள் குடியிருப்பு—பல்கலைக் கழக நகர் என்கிற முறையில் விரிந்து, வளர்ந்து வருகிற ஒரு சிறு நகரமாக அமைந்து இருக்கிறது. அதற்கு அருகிலேயே ஆழ்வார் நகர் என்ற பெயரிலே என்.ஜி.ஓ. காலனி இருக்கிறது. இதற்குப் பக்கத்திலே நாகமலைப் புதுக்கோட்டை என்ற ஊராட்சி இருக்கிறது. வடபழஞ்சி என்ற ஊராட்சி இருக்கிறது. இவை எல்லாவற்றிலும் மதுரைப் பல்கலைக்கழக ஆசிரியர்கள், அலுவலர்கள் நிறையபேர் குடியிருந்து வருகிறார்கள். ஆகவே, அந்தப் பகுதிகளுக்குப் போதுமான வசதிகள் செய்துகொடுக்கின்ற வகையிலே, அதை நகரியமாக அறிவித்தால், அந்தப் பகுதி வளர்ச்சி அடைவதற்கு உதவும் என்பதால், அதை நகரியமாக ஆக்குவதற்கு இந்த அரசு மீண்டும் ஆராயுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப்பிரிவு 4(1)-ல் ஒரு ஊராட்சியை அல்லது நகரத்தை நகரியமாக்க வேண்டுமென்றால் அந்த ஊராட்சி அல்லது நகரம் தொழிலாளர் குடியிருப்பாக அல்லது சுகவாசஸ்தலமாக இருக்க வேண்டும். அவை இரண்டுமே இந்த பல்கலை நகரில் இல்லை. மேலும், வடபழஞ்சி ஊராட்சியின் ஒரு பகுதியாக இந்த பல்கலை நகர் சேர்க்கப்பட்டிருப்பதாலும், இதை தனியாகப் பிரித்தால் அந்த ஊராட்சிக்கு வருமானம் குறைந்துவிடும் என்பதாலும் மேற்கொண்டு நல்ல திட்டங்களை அந்த ஊராட்சியின் மூலம் செயல்படுத்த முடியாது என்கின்ற காரணத்தாலும் இதைப் பிரிக்க முடியாத நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: தலைவரவர்களே, பல்கலை நகர் என்பது திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கிறது, வடபழஞ்சி பஞ்சாயத்தில் அடங்கும். திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியமும் வடபழஞ்சி பஞ்சாயத்தும் அந்த பல்கலை நகருக்கு மாபெரும் தலைவர், உத்தமத் தலைவர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் பெயரை வைக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். ஆகவே, அந்த பல்கலை நகருக்கு பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பெயரை வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, மூலக்கேள்வி பல்கலை நகரை தனியாகப் பிரித்து, நகரியமாக்கும் திட்டம் பற்றியது. பெயர் வைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருப்பதாகத் தெரியவில்லை.